ஞாலகுருவின் படைப்புக்கள்

# அருட்போருக்கு ஆயத்தமாகுங்கள்!

## குருவாணை!




நிறையக்ஞர், எல்லாம் வல்ல சித்தர்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 மாசி மாதம்.
**இந்து இலக்கியக் கழக வெளியீடு**
காணிக்கை: ரூ.10/-

# உள்ளுறை

1. **"அருட்போருக்கு ஆயத்தமாகுங்கள்"** - குருமார் வெங்கடேசன் அவர்களுக்கு 12-04-1988இல் குருதேவர் விடுத்த நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரையின் நகல்.
2. **"தலைமைப்பீடம் விடுக்கும் திருவோலை"** - பாளையங்கோட்டையைச் சேர்ந்த சித்தரடியான் ஒருவருக்கு 28-03-1988இல் குருதேவர் தலைமைப்பீடத்திலிருந்து விடுத்த அஞ்சலின் நகல்.
3. **"குருதேவரின் அருளுலகச் சமத்துவ உணர்வு"** - மதுரைச் சித்தரடியான் ஒருவருக்கு 12-03-1988இல் குருதேவர் தமது இயக்கத்தின் தலைமைப் பொறுப்பாளர் மூலம் எழுதிய விரிவான அஞ்சலின் நகல்.
4. **"குருவாசகம்"** - பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் எழுதிய குருவாசகம் எனும் நூலிலிருந்து இரு வாசகங்கள்.
5. **"இருக்குவேதம் 1 முதல் 10 வரை உள்ள 48 நாள் உரைக்கோவை வாசக மலர்களிலும் உள்ள கருத்து."**

தலைமைப்பீடம்,
12-4-88.

# அருட்போருக்கு ஆயத்தமாகுங்கள்!

## குருவாணை

மேற்கு மண்டலத்தின் இ.ம.இ. செயலாளர், அருள்மிகு வேம்படிதாளம் சுடலைக்காரி சன்னிதானம் சித்தரடியான் இரா. வெங்கடேசன் அவர்கள் சமூகத்திற்கு;

நான்குயுக நாயகம், அருளாட்சி நாயகம், இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுத்துக் கொள்ளும் மடல்:

1) தங்களின் அண்மைக் கால மேற்கு மண்டலச் சுற்றுப் பயண வெற்றிக்குக் குருதேவரால் பாராட்டும், அருளுலகத்தவரால் வாழ்த்துதலும் வழங்கப்படுகின்றன.

2) மேற்கு மண்டலத்தில் இ.ம.இ.க்குப் பொறுப்பேற்றிருக்கும் அருள்மிகு மரப்பறை அங்காளபரமேசுவரி சன்னிதானம் திரு இர.கங்காதரக்குமார் அவர்களின் தலைமையின் கீழும், அ.வி.தி. தலைவர் அருள்மிகு இராசிபுரம் ஐந்தொழில் வல்ல சிவபெருமான் சன்னிதானம் திரு வ.பன்னீர்செல்வம், அ.வி.தி. செயலாளர் அருள்மிகு மோரூர் நல்லபுள்ளியம்மன் சன்னிதானம் திரு அ.கை.உலகநாதன் ஆகியோரின் தலைமையின் கீழும் இயக்கம் நல்ல வேகமான வளர்ச்சி பெற்று வருகின்றது. மிக்க மகிழ்ச்சி. குருதேவர் பாராட்டுகின்றார்.

3) சேலம் மாவட்டத்தில் இராசிபுரம் அருகில் உள்ள கடந்தப்பட்டி கிராமம் நமது இயக்கத்தைப் பொறுத்தவரை ஒரு பல்கலைக் கழகமாகவும், பாடிவீடாகவும், பாசறையாகவும் இருக்கின்றது. இனிமேல் யார் மதித்தாலும், மதிக்கா விட்டாலும்; வளர்த்தாலும், வளர்க்கா விட்டாலும்; போற்றினாலும் போற்றா விட்டாலும்; அங்கு **<u>'அருகுபோல் முளைத்து ஆல்போல் கிளைத்து வருகின்ற' சித்தர்நெறிச் செயல்வீரர்களை</u>** ஒன்றும் செய்ய இயலாது. ஒவ்வொரு நாளும் சிலரிடமிருந்து வரக்கூடிய அஞ்சல்கள் அருளுலகின் வீர காவியங்களாக இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், நமது அருட்போரின் வீரத் தளபதிகளும், அருட்படை திரட்டு நாயகங்களும், அருட்படையின் வியூக நாயகங்களும், மகாபாரதப் போரில் இருந்ததைப் போல் தானாகவே தோன்றிக் கொண்டு இருக்கின்றார்கள். இப் பேருண்மையினை இனியும் நம்மவர்கள் உணராமலிருந்தால் தவறாகிடும். இந்த அன்பு வேண்டுகோளை மேற்கு மண்டலத்தின் ஒவ்வொரு மாவட்டத்தாரும், ஊராரும் உணர்ந்தேயாக வேண்டும்; ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். இது **<u>குருவாணை</u>**.

**<u>குறிப்பு</u>**:- நாமக்கல் பொன்னுசாமி; சிறுமுகை பழ.கோபால், சுசீலா நடராசன்; பெங்களூர் இரா.செ.வெங்கட்டரமணன்; வெண்ணந்தூர் யாகசாலைக் காப்பாளர்கள் அருணாசலம், வெங்கடாசலம், சேகர்; வெள்ளைப் பிள்ளையார் கோயில் கலைச்செல்வன், இராசேசுவரி; அலவாய்ப்பட்டி இராமசாமி, தைலா முதலியார்; மாட்டுவேலம்பட்டி ஞானசேகரன், குழந்தைவேலு; வேம்படிதாளம் வெங்கடேசன், இல.க.கணேசன்; இராசிபுரம் கங்காதரக்குமாரின் அன்னை பராசத்தி தோன்றல் சரசுவதி, இரத்தினம் செட்டியார், கங்காதரக்குமார் உள்ளிட்ட திருக்குமாரர்கள், பன்னீர்செல்வம்; முள்ளுக்குறிச்சி உலகநாதன், அவரது குடும்பத்தார்; ... முதலிய அனைவரும் தங்கள் தங்கள் வசதிகளுக்கும், வாய்ப்புகளுக்கும் ஏற்ப ஒருவருக்கொருவர் கலந்து பேசி வாரத்தில் சில நாட்களில் கடந்தப்பட்டி சென்று அங்காள

பரமேசுவரி கோயிலில் இரவு தங்கியும், மாலையில் அருள்மலைக்குச் சென்றும், பகலில் யாகசாலைக்குச் சென்றும், அங்குள்ள சித்தர்நெறிச் செல்வர்களை யெல்லாம் ஒன்று திரட்டிப் பயிற்சிக்குரியவர்களாக்க வேண்டும். உடனே கீழ்க்கண்டவாறு செயல்திட்டம் வகுக்கவும்.

(a) வெளியூரிலிருந்து கடந்தப்பட்டிக்குச் செல்கின்றவர்கள் தாம் அங்குத் தங்கக் கூடிய நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை முன்கூட்டியே திட்டமிட்டுக் கொண்டு சென்று விட வேண்டும். (ஒரு சில நாட்களுக்குக் கெடாமல் இருக்கக் கூடிய புளியோதரை, எலுமிச்சம் சோறு, ரொட்டி, பன், பிசுகட், முறுக்கு, ... என்று பார்த்து வாங்கிச் சென்று விட வேண்டும்.) கடந்தப்பட்டிக்காரர்களிடம் எந்தவிதமான உணவையும், உபசரிப்பையும் எதிர்பார்க்கக் கூடாது.

(b) அதாவது கடந்தப்பட்டிக்குச் செல்கின்றவர்கள் அங்குள்ளவர்களுக்கு உதவுகின்றவர்களாகத்தான் செல்ல வேண்டுமே தவிர, அவர்களிடமிருந்து உதவி பெறுகின்றவர்களாக இருக்கக் கூடாது.

(c) கடந்தப்பட்டியில் உள்ளவர்கள் போதிய படிப்பறிவு இல்லாதவர்களாகவும், போதிய வசதியில்லாதவர்களாகவும் இருக்கின்ற காரணத்திஞல்; நம்மவர்கள் அவர்களை உட்கார வைத்து <u>இந்துமத விளக்கம், இ.ம.இ. கொள்கை விளக்கம், தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்? சொல்லடி நாயஞர் பெரியார், ... என்ற புத்தகங்களைத் திரும்பத் திரும்பப் படித்து அதிலுள்ள வாசகங்களை அவர்கள் மனதில் அப்படியே பதியும்படிச் செய்ய வேண்டும்.</u> அதாவது, அதிலுள்ள கருத்துக்கள் நன்கு புரியும்படிச் செய்ய வேண்டும். அவற்றை நன்கு புரிந்து பிறருக்குப் புரிய வைக்கக் கூடியவர்களாகக் கடந்தப்பட்டிக் காரர்களைத் தயாரிக்க வேண்டும்.

(d) இதுவரை வெளிவந்துள்ள குருதேவர் அறிக்கைகளேப் படித்துக் காட்டி கடந்தப்பட்டி அடியான்களின் சந்தேகங்களே விளக்க வேண்டும். குறிப்பாக, மெய்யான இந்துமதமும் பொய்யான ஹிந்துமதமும், சித்தர் பாரதம், சித்தர் இராமாயணம், கார்ல்மார்க்சு வரலாறு, புரட்சி மயங்கக் கூடாது, அன்புச் சேவுக தொடரில் இருப்பவை, சுடுகாட்டுப் பூசை, திருமூலர் வரலாறு, திருவள்ளுவர் (வரலாறு), ஓகாசன யோகாசன நிலேகள், இராமகிருட்டிணர், இராமலிங்க அடிகளார், ... முதலிய பல கட்டுரைகளேப் படித்துக் காட்டித் தெளிவாக விளக்கிட வேண்டும். படிப்பதோடு நில்லாமல், அதுபற்றிய விவாதமும் நடத்திட வேண்டும்.

(e) நம்மவர்கள் எல்லோருமே பேசுவதற்கும், சொற்பொழிவாற்றுவதற்கும் கடந்தப்பட்டி பயிற்சி மன்றமாகட்டும்.

(f) கடந்தப்பட்டியில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தமது பயிற்சிக் காலத்திலும், முயற்சிக் காலத்திலும் வாழ்ந்து எல்லாவகையிலும் செயல்பட்டிருக்கின்ருர் என்பதால்; அந்த வட்டாரத்தில் உள்ள மலேகளும், குன்றுகளும், கற்களும், பாறைகளும், மண்மலேகளும், சிறுதுகள்களும், மரம் செடி கொடிகளும், ஓடைகளும், ஊற்றுக்களும், கிணறுகளும், மற்ற உயிரினங்களும் கூட அருளாற்றலே, அருளூறும் தன்மையை, அருட்பண்பினே, ... பெற்றிருக்கின்றன! பெற்றிருக்கின்றன! பெற்றிருக்கின்றன! இதனே யாரும் வீணுக்கி விடக் கூடாது.

(g) அருளுலக எதிரிகளோ, அரக்கர்களோ, அசுரர்களோ, பூதங்களோ, கெட்ட தேவதைகளோ, பேய் பிசாசுகளோ, காற்று கருப்புகளோ, ... திருந்த வேண்டுமே தவிர; நமது இயக்க முயற்சிகளுக்கு ஊசிமுனேயளவு கூட ஊறு செய்து விடக் கூடாது; அதாவது கேடு செய்து விடக் கூடாது; அதாவது

தடுத்துக் கெடுத்து விடக் கூடாது. எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!

(h) கடந்தப்பட்டிக்கு யார் தொண்டு செய்யச் சென்ருலும், தம்முடன் நல்ல ஓமியோபதி மருத்துவரையோ, ஆங்கில முறைப்படி MBBS படித்த டாக்டரையோ வாரம் ஒருநாள் கடந்தப்பட்டிக்குள் தொண்டு செய்ய இயக்கச் சார்பில் அழைத்துச் சென்ருல் நல்லது.

**குறிப்பு**:- திரு பன்னீர்செல்வத்திற்குத் தெரிந்த சித்த மருத்துவர்கள் அல்லது திரு உலகநாதனுக்குத் தெரிந்த சித்த மருத்துவர்கள், டாக்டர்கள் வாரம் ஒருநாள் அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை கடந்தப்பட்டி சென்று மருத்துவப் பரிசோதனைகள் நடத்தி மருத்துவ உதவி செய்ய இயக்கச் சார்பில் ஏற்பாடு செய்தால் மிக நல்லது. **'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'**. இந்தத் தொண்டின் மூலம் இயக்கமும் நன்கு வளரும்.

(i) நல்ல படித்த இளைஞர்களைக் கொண்டு அல்லது படித்த ஆசிரிய மாணவர்களைக் கொண்டு ஓய்வு நேரங்களில் சித்தர்கள் வழங்கியுள்ள சாகாக் கல்வி, தமிழகத்தின் இலக்கிய சமய அரசியல் வரலாறுகள், சித்தர் பாரதம், சித்தர் இராமாயணம், முச்சங்க வரலாறு, நாயன்மார்கள் ஆழ்வார்கள் வரலாறு, உலகின் தோற்றம், உயிர்கள் பயிர்களின் தோற்றம், வானியல், ... முதலிய அனைத்து வகையான அறிவியல்களையும், அருளியல்களையும் மக்களுக்குக் கற்றுக் கொடுத்திடல் வேண்டும். அதனுல் மக்களிடையே கண்மூடித்தனமாக இருந்திடும் பொழுதுபோக்கு வெறிகள் மாறிடும், மறைந்திடும். (ஆபாசப் புத்தகங்கள் படித்தல், திரைப்படம் பார்த்தல், (TV) டிவி பார்த்தல், ... போன்ற கேளிக்கைச் சிந்தனைகள் கட்டாயமாக மாற்றப்படல் வேண்டும்). அப்போதுதான் புரட்சி நடைபெறும். அதாவது, சாதிமத வேறுபாடுகளோ, ஏற்றத் தாழ்வுகளோ இல்லாத உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக்

கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் முயற்சியில் நம்மால் முழுமையாக வெற்றி பெற முடியும். அதுதான் உலக ஆன்மநேய ஒருமைப்பாடு உருவாகிட வழிசெய்யும். அதுதான் நமது இலட்சியம். அதற்குப் பாடுபடுவதே நமது நோக்கம்.

(j) இந்த நோக்கத்தினேச் செயல்படுத்துவதற்காகவே குருதேவர் எழுதியுள்ள பாடல்களேயும், இசைப்பாடல்களேயும் இசையோடு பாடக் கூடியவர்களேப் பார்த்துத் தயாரித்து மேற்கு மண்டலம் முழுவதும் அவர்களேச் சுற்றி வரச் செய்ய வேண்டும். அவர்கள் நம்முடைய கருத்துக்களே, பாடல்களே எந்தத் திரைப்படப் பாட்டின் மெட்டிலும் பாடலாம். இப்படிப் பாட்டுப் பாடுபவர்களேத் தயாரிக்கும் இடமாகக் கடந்தப்பட்டி அமையட்டும். இதற்குரிய பயிற்சி மன்றத்தைக் கடந்தப்பட்டியில் நடத்துங்கள்.

(k) நன்கு பாடக் கூடியவர்கள், பாடல்கள் எழுதக் கூடியவர்கள், இசைப்பாடல்கள் எழுதக் கூடியவர்கள், சாதாரண நிகழ்ச்சியை இசைப்பாடலாக எழுதக் கூடியவர்கள் நிறைய பேர் நாடெங்கும் இருக்கின்றூர்கள். அவர்களேச் சேலம் வரவழைத்து அவர்களிடம் அநுபவப் பயிற்சி பெற்றுக் கொள்ளுங்கள். தமிழகம் முழுமைக்கும், சேலம் மாவட்டம் முன்மாதிரியாகத் திகழட்டும்.

(l) கடந்தப்பட்டி நகரச் சந்தடிகளிலிருந்து ஒதுங்கி இயற்கை அழகுடையதாக இருக்கின்றது. குருதேவர் கடவுள்களோடும், தேவர்களோடும், தேவதைகளோடும், ... மற்ற அருளுலக நிலேயினர்களோடும் தொடர்பு கொண்ட **அருள்மலே** கடந்தப்-பட்டியில்தான் இருக்கின்றது. குருதேவரின் அருட்தோற்றம் உலாவந்த இடங்கள் கடந்தப்பட்டியில்தான் இருக்கின்றன. எனவே, இன்றைய நிலேயில் பயனற்ற அரசியல் பிறச்சினேகளிலோ, சமய சமுதாயப் பிறச்சினேகளிலோ மாட்டிக் கொண்டு தவிக்காத கள்ளம் கபடம் அற்ற கிராம மக்களே தத்துவ விதைப் பண்ணேகளாகவும்,

சித்தாந்த நாற்றுப் பண்ணைகளாகவும், அருட்போர்களை உருவாக்கும் பாடி வீரர்களாகவும், அருட்படைத் தளபதிகளாகவும், அருட்போர்த் தளபதிகளாகவும், அருட்சேனைத் தளபதிகளாகவும், அருட்பட்டாளத் தளபதிகளாகவும், அதற்குரிய பல்வேறு வகையான நாயகங்களாகவும் உருவாக்கும் பாசறையாகக் கடந்தப்பட்டி பயன்படுத்தப் பட்டிடல் வேண்டும்! பயன்படுத்தப் பட்டிடல் வேண்டும்! பயன்படுத்தப் பட்டிடல் வேண்டும்! இவற்றிற்கான நுட்பதிட்பங்கள் அமைந்த செயல்திட்டங்களை உருவாக்குங்கள். தலைமைக்குக் கட்டுப்பட்டுச் செயல்படக் கூடிய ஒற்றுமை உணர்வையும், ஒருமைப்பாட்டு உணர்வையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

(m) இதேபோல், மேற்கு மண்டலத்தில் வேம்படிதாளம், இராசிபுரம், கடந்தப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, வெள்ளைப் பிள்ளையார் கோயில், அலவாய்ப்பட்டி, வெண்ணந்தூர், ... முதலிய இடங்களில் ஒவ்வொரு மையத்தையும் ஒரு செயல் மையமாகவும் (Service Centre), ஒரு பயிற்சி மையமாகவும் (Training Centre) உருவாக்கிட வேண்டும். அப்போதுதான் பல பேராசிரியர்களும், ஓய்வு பெற்ற பேராசிரியர்களும், அறிஞர்களும், கலைஞர்களும், படிப்பாளிகளும், பத்தர்களும், சாகாக் கல்வியில் நாட்டமுடையவர்களும், தமிழினத்தின் அருட்கலையில் ஆர்வமுடையவர்களும்; தேனீக்கள் மலர்களை நாடிச் செல்வது போல உங்கள் வட்டாரத்திற்கு வரமுடியும் அல்லது வரச் செய்யமுடியும். அந்த ஓர் அரிய, கூரிய, சீரிய, பெரிய, நேரிய சூழ்நிலைகளை உருவாக்கிட முன்வாருங்கள்! முன்வாருங்கள்! முன்வாருங்கள்! இதுபோன்ற பணியில் நமது இயக்கத்தில் நேரடியாக உறுப்பினர்களாக இருப்பவர்களும்; ஆர்வலர்களும், ஆதரவாளர்களும், ஏந்தாளர்களும், நம்பிக்கையாளர்களும், விருப்பாளர்களும், ... மிகமிக விரைவில் தங்களை அறியாமல் ஈடுபட்டிடுவார்கள்.

(n) நம் நாட்டில் ஏராளமாகத் தமிழின வெறியர்கள், தமிழ்மொழி வெறியர்கள், தமிழ்நாட்டு வெறியர்கள், தமிழ்ப் பண்பாட்டு வெறியர்கள், தமிழ் மத வெறியர்கள் இருந்தும் கூட அனைவரையும் ஒன்றுசேர்த்து கட்டுப்பாடாக இணைந்து செயல்பட வைக்கும் தலைவர்கள் இல்லை. அவர்கள் எல்லாம் கண்மூடித்தனமாக நாத்திக இயக்கங்களிலும், அரசியல் இயக்கங்களிலும், சாதிச் சங்கங்களிலும், மத நிறுவன நிருவாகங்களிலும், கலைவெறி கொண்ட நிருவாகங்களிலும் கலந்து **கடலில் கரைத்த பெருங்காயம் போல்** ஆகி விடுகிறார்கள்! ஆகி விடுகிறார்கள்! ஆகி விடுகிறார்கள்! அதுபோல் இனியும் நாம் இருக்க விடக் கூடாது.

(o) நம்மவர்கள் இந்த அஞ்சலுக்குப் பிறகாவது புத்துணர்வு பெற்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரியத்தில்,

**"... எம்மால் உருவாக்கப் பட்டவர்களே! நீங்கள் இளைஞர் என்றோ, முதியவர் என்றோ, சிறுவர் என்றோ, ஆண் என்றோ, பெண் என்றோ எண்ணாமல் நமது தாயகத்தின் நீடுதுயில் நீங்கிடப் பாடிடும் பல்வேறு வகைப் பறவைகளாக மாறி நாடெங்கும் பறந்து செல்லுங்கள். நமது பத்தி நெறி வரலாறு பற்றிப் பாடுங்கள்! நமது சத்தி நெறி பற்றி விளக்கிடுங்கள்! நமது சித்தி நெறியின் அருமை பெருமைகளை அறிவிப்புச் செய்யுங்கள்! எல்லோரையும் நல்லவராக்குங்கள். முடிந்தவரை பொல்லாதவரை அழிக்கப் போதுமான அளவு வல்லவர்களை உருவாக்குங்கள். இனிப் போரின்றிச் சமாதானம் இல்லை; இனி அழிவின்றிச் செழிப்பில்லை. இனிப் பாடிவீடும், பாசறையும் அமைத்துப் படை நடத்திச் செயல்படாமல், நம் பகைவர்கள் நம்மை விட்டுப் போக மாட்டார்கள். இனிமேலாவது விழிச்சியாலும், எழிச்சியாலும், கிளர்ச்சியாலும் பகைவர்களை அடியோடு அழிக்க முயற்சிகள் செய்தால்தான் அவர்கள் விடிவதற்கு முன்னே**

**சொல்லாமல் கொள்ளாமல் நம் தாயகத்தை விட்டு ஓடிட முடிவு எடுப்பார்கள். நமது வழிபாட்டு நிலையங்களிலே முரசு முழங்கட்டும், பறை ஒலிக்கட்டும், மணியோசைகள் எங்கும் எதிரொலிக்கட்டும். இவற்றால் நமது மொழி, இன, மதப் பண்பாட்டுப் பகைவர்கள் இடியோசை கேட்ட நாகம் போல் அரண்டு, மிரண்டு, மருண்டு மடிவார்கள். அப்பொழுதாவது நமது தத்துவங்களும், செயல் சித்தாந்தங்களும் அருகுபோல் முளைக்கட்டும், ஆல் போல் தழைத்து நிலைக்கட்டும். ...”**

என்று கூறியிருக்கும் வாசகங்களையும், வாசகங்களைச் சார்ந்த சிந்தனையோட்டங்களையும், செயல்திட்டங்களையும் நாம் கட்டுப்பாடாக மீண்டும் நம்மவர்களுக்கிடையில் பயிர் செய்தேயாக வேண்டும்! பயிர் செய்தேயாக வேண்டும்! பயிர் செய்தேயாக வேண்டும்! <u>இச் செயல்திட்டம்தான் உயிர் தந்து, உயர்வு தந்து, உய்வு தரும்</u>.

(p) கி.பி.1772இல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்த சித்தர் கருவூரார் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்கள் நமது தாயகத்து மக்களைத் தட்டியெழுப்பித் தயாரிக்க எழுதிக் குவித்திட்ட எண்ணற்ற சுவடிகளும், ஏடுகளும், புத்தகங்களும் கணிசமான அளவு இ.ம.இ.யின் இரண்டாவது தலைவரான சித்தர் காகபுசுண்டர் வழிவந்த கரூர் வட்டத்து முடிகணம் எனும் முடிகண்ட சோழபுரத்துக் காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காக்கையர் எனும் சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்களால் காக்கப்பட்டு இருக்கின்றன. அவர் காத்துத் தந்துள்ள ஒவ்வொரு நூலும் ஒரு பல்கலைக் கழகத்துக்குச் சமமானவை. இன்னும் சொல்லப் போனால், அவற்றிலுள்ள ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு சொற்றொடரும் ஒவ்வொருவரையும் தயாரிக்கும் ஒரு மாபெரும் சிந்தனைச் சிற்பிக்குச்

சமமானவை, அல்லது தத்துவ மேதைக்குச் சமமானவை, அல்லது சித்தாந்தச் செயல்வீரர்களுக்குச் சமமானவை.

சான்றுக:-

**"நாம் குருபாரம்பரியங்களைப் பெற்றிருந்தும் மதத்துறையில் குருடர்களாகி விட்டோம்; நாம் அரசபாரம்பரியங்களைப் பெற்றிருந்தும் அரசியலில் அனாதைகளாக, அடிமைகளாக, நாடோடிகளாகி விட்டோம்; நாம் இலக்கிய பாரம்பரியங்களைப் பெற்றிருந்தும் பிற மொழிகளுக்கு அடிமைகளாகி விட்டோம்; நமது அமுதத் தமிழ்மொழியைச் சிறைச்சாலைக்குள் பூட்டி விட்டோம்."**

**"நமக்கு 1359 அருளுலக இலக்கியங்கள் இருந்தும் நமது அருளுலக வாழ்வு வறுமையையும், வெறுமையையும் பெற்று விட்டது. நமது வழிபாட்டு முறைகளிலே ஐந்தீ வேட்டலும், முத்தீ ஓம்பலும் அருட்பெருஞ்சோதிகளாகச் சுடர்விட்டும், நமது வாழ்வியல் வழிபாட்டு முறைகள் இருண்டு போய்விட்டன. நமது ஆன்மீக வாழ்வின் மேன்மைக்கும், தொன்மைக்கும், திண்மைக்கும், நுண்மைக்கும் சான்றுக விண்ணுயர்ந்த கண்கவர் கலைக் கோபுரங்கள் உள்ள வழிபாட்டு நிலையங்கள் கணக்கற்று இருந்தும்; நமது ஆன்மீக வாழ்வு நாத்திகர்களின் வேட்டைக் காடாகி விட்டது, அல்லது வேட்டைப் பொருளாகி விட்டது."**

**"குவலய குருபீடங்களையும், குருமகா சன்னிதானங்களையும், குருதேவர்களையும், ஆச்சாறியார்களையும், ஆச்சாரியார்களையும், மடாதிபதிகளையும், பீடாதிபதிகளையும், அத்திரிகளையும், சாத்திரிகளையும், சூத்திரிகளையும், தோத்திரிகளையும், நேத்திரிகளையும்,**

வேத்திரிகளையும் கணக்கற்ற கோடியாண்டுகளாகப் பெற்றுள்ள தமிழர்கள்; இன்றைக்கு நமக்குப் புதியவர்களாகவும், புதிரானவர்களாகவும், புரியாதவர்களாகவும், புல்லுருவிகளாகவும், பொல்லா நோய்களாகவும், கொடிய பேய்களாகவும், நெடிய பகைவர்களாகவும்,.... இருப்பவர்களையெல்லாம் ஆசிரியர்களாகவும், ஆச்சாரியார்களாகவும், சன்னிதானங்களாகவும், பீடங்களாகவும், ... ஏற்றுத் தடுமாறிக் கேடுற்றுப் படுகுழியில் வீழ்ந்து உழன்று கொண்டிருக்கின்றார்கள் தமிழர்கள்.”

“எல்லாத் துறைகளிலும் விழிச்சிக்கும், எழிச்சிக்கும், செழிச்சிக்கும், புகழ்ச்சிக்கும் உரியவராக இருந்த நம் தமிழர்கள் என்றைக்கு, எப்படி, எவரெவரால், எவ்வெவ்வாறு, எந்தெந்தக் காலங்களில் வீழ்ச்சி பெற்றார்கள்? தாழ்ச்சியுற்றார்கள்? இகழ்ச்சி அடைந்தார்கள்? மீட்சியற்றுச் சூழ்ச்சியில் சிக்கித் தவிக்கின்றார்கள்? ... என்பதை எண்ணிப் பார்க்கக் கூடிய விழிச்சி உணர்வு, எழிச்சி உணர்வு, ... என்றைக்கு ஆட்சி பெறும்? செழிச்சி பெறும்? எவரால் மலர்ச்சி பெறும்? எவ்வாறு மறுமலர்ச்சி அடையும்? அதற்குரிய அருளாட்சி அமைப்புப் பணி முயற்சி அயர்ச்சியின்றித் தொடர்ச்சியாக வளர்ச்சி பெறுவது எப்போது? எப்போது? எப்போது?...”

“தமிழினம் தன்னுடைய புகழ்ச்சி மிக்க ஆட்சி வரலாற்றின் மாட்சிமைகளை உணர்ச்சியூறு வரலாறுகளாகப் புரிந்து, கிளர்ச்சியுற்றுத் தளர்ச்சி நீங்கித், தனது இகழ்ச்சி நீங்கிடச் செய்யும் முயற்சிகளில் ஈடுபடக் கூடிய காலத்தை உருவாக்குபவன்தான் அருளாட்சித் தலைவனாக, அருளாட்சி

**நாயகமாக, அருளாட்சி அமைப்புப் பணித் தளபதியாக மாற முடியும், தேற முடியும்..."**

இதுபோன்ற வாசகங்களைப் படித்துப் படித்துப் புரிந்து நம்மவர்கள் விறுவிறுப்பாகச் செயல்பட வேண்டும். அருட்போருக்கு ஆயத்தமாகிட வேண்டும்.

இவ்வஞ்சலின் கருத்து எல்லாரிடமும் பரவிட விரைந்து இதற்குப் பல நகல்கள் எடுத்து எல்லா அடியான்களுக்கும் அனுப்பிச் செயல்படுங்கள். இவ்வஞ்சலைப் பெறும் ஒவ்வொருவரும் 2 பேனா நகல்கள் எழுதித் தலைமைப்பீடத்திற்கு அனுப்பிட வேண்டும். குருவாணை.

***(ஒப்பம்)* நான்குயுக நாயகம், அருளாட்சி நாயகம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

*திருவோலை நாயகம்:* இளந்துறவி சுந்தரானந்தா,
நாள்: 12-4-88.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது.//**

**பிழை திருத்தம்:**

இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்படும் "மேற்கு மண்டல அ.வி.தி. செயலாளர் மோரூர் நல்லபுள்ளியம்மன் சன்னிதானம் திரு அ.கை. உலகநாதன்" அவர்களின் அருட்பட்டம் சென்ற மார்கழி மாத (2021 டிசம்பர்) வெளியீட்டில் 17ஆம் பக்கத்தில் *போரூர்* நல்லபுல்லியம்மன் சன்னிதானம் என்று தவறுக அச்சிடப்பட்டிருந்தது. அன்புகூர்ந்து திருத்திப் படிக்குமாறு வேண்டப்படுகிறது.

# தலைமைப்பீடம் விடுக்கும் திருவோலை

தலைமைப்பீடம்,
28-3-88.

அருள்மிகு பாளை ஆயிரத்தம்மன் சன்னிதானம் திரு இ.பூவலிங்கம் (79, சிவன்கோயில் தெற்கு ரதவீதி, பாளையங்கோட்டை, நெல்லை-627002) அவர்களுக்கு,

ஞானச்சாரியார், குருமகாசன்னிதானம், நான்குயுக நாயகம், அருளாட்சி நாயகம், தத்துவ நாயகம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் தலைமைப்பீடம் விடுக்கும் திருவோலை:-

1. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுக்கால இடைவெளிக்குப் பிறகு அதாவது பிற்காலச் சோழப் பேரரசு ஒன்றை அருட்பேரரசாகத் தோற்றுவித்த பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களுக்குப் பிறகு இப்போதுதான் முதன்முதலில் இந்துமதத்திற்கு என்று பயிற்சிப் பள்ளி மார்ச் 4, 5, 6 (மாசி மாதம் 21, 22, 23 பிறவாக ஆண்டு) ஆகிய தேதிகளில் திருவரங்கத்தில் நடைபெற்றது. அதில் நெல்லை மாவட்டத்தின் சார்பாகத் தாங்கள், வைத்தியலிங்கம், பரமசிவம் என்ற மூவர் வந்து கலந்து கொண்டீர்கள், இது தென்பாண்டி மண்டலத்திற்கே ஓர் அரிய பெரிய செயலாகும். வாழ்த்துகிறார், பாராட்டுகிறார் குருதேவர். நீங்கள் மூவர் வந்தது மூன்று கோடிப் பேர் பயிற்சிப் பள்ளிக்கு வந்ததற்குச் சமம். இது மாபெரும் வெற்றியே.

இவ்வெற்றியை மதிக்கிறார். இயக்கம் முழுவதும் தெரியும் வண்ணம் பாராட்டுகிறார் குருதேவர். உணர்ந்து புரிந்து செயல்படுக.

2. கடுமையும் கொடுமையும் உடைய காவல்துறையில் பணியாற்றும் தாங்கள் மென்மையான அருளுள்ளம் படைத்தவராக இருப்பது வியக்கத் தக்கது. தங்களைப் போன்று திரு இராசரத்தினம் என்பவர் போலீசு கண்ட்ரோல் அறையில் வேலை பார்ப்பவர் நமது இயக்கத்தில் இருந்தார். அவரிடமும் பயிற்சிப் பள்ளி பற்றிக் கூறி குருதேவர் விசாரித்தார் என்பதை தெரியப் படுத்துக.

3. அருளாட்சிக்காக மண்ணுலகுக்கு வந்துள்ள தேவதேவியும், அருட்போருக்காக மண்ணுலகிற்கு வந்துள்ள உகஅற நாயகியும் சேர்ந்து, தலைமைப்பீடத்திலிருந்து அச்சிட்டு வெளிவரும் மாத அறிக்கையான 'குருதேவர்' அறிக்கை பதினெண்சித்தர் பீடாதிபதியின் கருத்தை மட்டுமின்றி அருளையும் தாங்கி வெளிவர வேண்டும் என்ற செயல்திட்டத்தை வகுத்துள்ளார்கள். அப்போதுதான் சன்னிதானப் பட்டம் பெற்று அடியான், அடியாள், அடியார் என்ற நிலைகளில் வாழும் அனைவரும் மாதம் தோறும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருளைப் பெற்று விரைந்து அருளுலகில் பயிற்சி முயற்சிகளில் தேர்ச்சிகளையும், முதிர்ச்சிகளையும் பெற்றிட முடியும்.

மேலும், பல்வேறு வகையான பாதிப்புக்களால் நோயாளிகளாகவும், பேயாளிகளாகவும் அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரர்களால் நலம் பெறுகிறவர்கள் தொடர்ந்து நலம் பெறுகிற அளவிற்கு குருதேவரது அருளையும், வாழ்த்தையும், அருளூறு பூசனைப் பொருளையும் பெறுவதற்கு கொள்கை விளக்க முழக்க ஏடான 'குருதேவர்' அறிக்கை அவர்கள் கையில் கிடைக்குமாறு செய்ய வேண்டும். அப்போதுதான் இது விருந்தாகவும், மருந்தாகவும் பயன்படும்.

எனவே, மேற்படிக் கருத்துக்களை எல்லாம் நீங்கள் விளக்கி உரைத்து நமது இயக்க உறுப்பினர்களையும், நம்மிடம் அருள் பெற்று நலமடைய வருபவர்களையும், நலமடைந்தவர்களையும் உடனடியாக இந்த ஆண்டிற்குரிய சந்தா ரூ.36/- கட்டி குருதேவர் அறிக்கை பெறுமாறு செய்யுங்கள்.

குறிப்பு:-

இதுவரை வெளிவந்துள்ள குருதேவர் அறிக்கைகளையும், அச்சிட்டுள்ள புத்தகங்களையும் பொருள் வசதியுள்ள இயக்கத்தவர்களும், நோயாளிகளும், பேயாளிகளும், ஆதரவாளர்களும் வாங்கிப் படிக்குமாறு செய்ய வேண்டும். எனவே, இம்மாபெரும் பணியினை நீங்கள் உங்களால் இயன்ற அளவு செய்யுங்கள்.

4. குருதி வண்ணச் சிவப்பாடை உடுத்திய அனைவருமே குருதேவரின் பதிலிகளாகச் செயல்படத் தயாராக இருப்பவர்கள்தான். அதற்குரிய ஒப்புதல்களும் ஏற்கனவே ஆணைகளாக வழங்கப் பட்டிருக்கின்றன. முதல் யுகத்தில் முதன்முதலாக முதல் பதினெண்சித்தர் பீடாதிபதியான சிவபெருமானால் எழுதப்பட்ட குருபாரம்பரியத்திலேயே,

**“எவனொருவன் தன்னை முழுமையாகக் குருவுக்குக் காணிக்கையாக்கிக் குருதேவரை முழுமையாகப் பத்தி செய்து வாழ்கின்றானோ; அவனுக்குள் குருதேவர் வாழ ஆரம்பித்து விடுவார். அதன்பிறகு அவன் குருதேவராகவே தனது சொல்லிலும், செயலிலும் வாழ்ந்திடுபவன் ஆகிறான். அப்படியல்லாமல் உதட்டளவில் ‘குருதேவருக்குள் நான், எனக்குள் குருதேவர்’ என்று கூறித் திரிபவன் எந்த நொடியிலும் எதிர்பாராமல் மாபெரும் வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் பெற்றுக் குருத் துரோகியாகவும், குரு விரோதியாகவும் அறிமுகப் பட்டிட நேரிட்டிடும். எனவே, இந்துமத வளவளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்சிக்காகவும், ஆட்சி மாட்சிக்காகவும் உழைப்பவனே சிறந்த**

**அருளாளனுகத் தேர்ந்திடுவான் - என்பதுதான் பதினெண்-சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் இந்துமத அருளுலகப் பயிற்சியாளர்களுக்கு விடுத்துக் கொள்ளும் அறிவுரை"**

என்று குறிப்பிடுகிருர்.

5. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் தாங்கள் செயல்பட வேண்டும். எப்பாடுபட்டாவது இரு பேளு நகல் இவ்வஞ்சலுக்கு எழுதித் தலைமைப் பீடத்திற்கு அனுப்புங்கள். சில கார்பன் நகல்கள் எடுத்து வேம்படிதாளம் சீ.மணி, சிறுமுகை பழ.கோபால், மதுரை செகதீசன், வேலூர் பெ.சுப்பையா பி.இ., காரைக்குடி இராமானுசதாசு, மதுரை என்.எஸ்.சுவாமிநாதன் ஆகியோருக்கு அனுப்புங்கள். இதன் நகல் பெறுவோர் உடனே தலைமைப் பீடத்திற்கு 2 பேளு நகல்கள் எழுதி அனுப்ப வேண்டும் என்று குருவாணை இட்டு எழுதுங்கள். தாங்களும் செயல்படுங்கள். மற்றவர்களையும் செயல்படச் செய்யுங்கள்.

***அஞ்சல் நாயகம்:* இளந்துறவி சுந்தரானந்தா,**

**28-3-88.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: தட்டச்சு செய்யப்பட்ட நகல்.//**

ஓம்

# <u>குருதேவரின் அருளுலகச்</u>
# <u>சமத்துவ உணர்வு</u>

தலைமைப்பீடம்,
12-3-88.

பேரன்புமிக்க பெரியவர் சித்தரடியார் கு. கேசவன் (அறை எண் 4, முதல் தளம், கீழமாசி வீதி, மதுரை-1) அவர்களுக்கு,

சி. கவிக்குமார், தலைமைப் பொறுப்பாளர் வரையும் மடல்; குருதேவரின் ஆணைகளையும், ஒப்புதலையும் பெற்று வரையும் மடல்:

1. தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் நலமாகட்டும்.

2. தங்களின் 10-3-1988ஆம் தேதிய எட்டுப் பக்க மடல் கண்டோம். குருதேவருக்குப் படித்துக் காட்டினோம். மிகவும் அக மகிழ்ந்தார். தங்களின் அளப்பரிய ஆற்றலையும், உணர்வையும் குருதேவர் பாராட்டுகின்றார்.

3. தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு எனும் முக்கோணக் கோட்டையை வலுப்படுத்த பதினெண்சித்தர் நெறியெனும் சீவநெறியான **மெய்யான இந்துமத**த்தின் மூலம் முயன்று வருகின்றோம். நாம் செய்யப் போவது <u>**மதப் புரட்சியோ!, மதத்தில் புரட்சியோ!, மதங்களுக்குள் புரட்சியோ! இல்லை; மதவழிப் புரட்சியே ஆகும்**</u>. இந்துமதத்தின் வாழ்வியல் நெறிகளை மீண்டும் மக்களிடையே அறிமுகப் படுத்த; அருளுணர்வு பொங்கிடும் அருளாட்சி மலரச் செய்வதே நமது நோக்கும் போக்குமாகும். இதற்காக, அருளாட்சி நாயகமாக, குவலய குருபீடமாக, இந்துமத ஆச்சாறியாராக, தமிழின ஆச்சாரியாராக,

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, குருமகாசன்னிதானமாக, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறாராகச் செயல்பட்டு வரும் நமது குருதேவர் சாதி, மொழி, இனம், நாடு, ... இவைகளைக் கடந்து ஆண்களையும், பெண்களையும் தெரிந்தெடுத்து, பயிற்சிகளைப் பெரும் ஆர்வத்தோடு வழங்கி வருகின்றார்.

4. தம்மை நாடியும், தேடியும் வருகின்றவர்களிடம் உள்ள அருளாற்றலை, அருளூற்றுக்களைக் கண்டு குருதேவர் இச்சமுதாய மக்கள் நலமும், வளமும் அடைய பயன்படுத்திடும் வழிமுறைகளைக் கூறுகின்றார். அதாவது, குருதேவர் எப்போதும் தாம்தான் எல்லாவற்றையும் கண்டுபிடித்தோம், செயலாற்றி வருகின்றோம் என்று கூறுவதே இல்லை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அருளூற்றுக்களைக் கண்டுபிடித்து, அதை இறைத்து மக்களுக்கு வாரிவாரி வழங்கும் அருட்கொடை வள்ளலாகவே வாழ்ந்து வருகின்றார்.

5. எப்படி நிலத்தடியில் நீர் ஊற்று இருந்தால் அதைத் தோண்டிப் பயன்படுத்துவது போலவும், பெட்ரோலிய ஊற்றுக்களைக் கண்டுபிடித்து இறைத்துப் பயன்படுத்துவது போலவும்தான்; அருளாற்றலை தமக்குள் கொண்டு அருட்தொண்டு ஆற்றி வரும் தங்களுக்கு இச்சமுதாயத்தில் முறையான அறிமுகத்தையும், முழுமையான பயனையும் பெற்றுத் தரக் குருதேவர் விரும்புகிறார். இறைக்கின்ற கிணறு ஊறும் என்பது போல அருளாளர்கள் பிறருக்கு அருள் வழங்கும் போதுதான் சத்தி சித்திகளைப் பெற்று உயர்கின்றார்கள்.

6. தாங்கள் ஓர் அருளூற்று. அதை குருதேவர் மூலம் அதாவது தாங்கள் குருதேவரிடம் தங்களை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டு செயல்பட வரும்போதுதான் யாவும் வெற்றியடையும். யாருடைய ஆற்றலையும், தகுதியையும் எப்போதும் குருதேவர் தடுத்து நிறுத்த மாட்டார். தகுதியுள்ளவர்கள் யார் கிடைத்தாலும்

அவர்களுக்குரிய பட்டங்களை வழங்கி அவர்களை அருளாளர்களாக மாற்றிடும் முயற்சியாளராகவே குருதேவர் வாழ்கின்றார். எனவே, நம்மைப் போன்றோர்கள் குருதேவரை **குரங்குக் குட்டியாகப்** பிடித்துக் கொண்டு முன்னேற வேண்டும்.

7. தாங்கள் தங்களுக்குள்ளே இருக்கும் அருளாற்றலை முறைப்படுத்தி மக்களுக்கு வழங்கிட முன்வர வேண்டும். அதற்கு முழுமையான பயிற்சிகளைப் பெற வேண்டும். 'குருடன் கையில் கிடைத்த புதையலாக', 'காட்டிலே காய்ந்த நிலாவாக' உங்கள் அருட்செல்வம் வீணாகிடக் கூடாது. எந்தத் தனிமனித ஆற்றலையும் வீணாக்கக் கூடாது என்பதுதான் குருதேவரின் கொள்கை.

ஆதிபராசத்தி பங்காரு அடிகளார் போன்றோர் அருளுலகில் தாங்கள் முதலாளிகளாக இருக்கவே நினைக்கின்றனர். ஆனால், நமது குருதேவரோ **தம்முடைய தலைமைப்பீடத்தை** யாரேனும் தகுதியுடையவர் ஏற்க வந்தால் தாராளமாகத் தந்து விட்டு ஆழ் தவத்தில் இருந்திடவே விரும்புகிறார். இன்று உலகியல் வாழ்வில் கூட தலைமைப்பீடத்துக்கு வருகின்ற அடியான்களுக்கும், ஆர்வலர்களுக்கும் குருதேவர் தாமே மந்திரிக்காமல் இளந்துறவி சுந்தரானந்தா அவர்களோ, மற்ற தலைமைப்பீடப் பணியாளர்களோதான் மந்திரித்து அருள் வழங்குகின்ற உரிமையை வழங்கியுள்ளார்.

தன்னுடைய அருளாற்றலை மண்டலங்கள் தோறும், மாவட்டங்கள் தோறும் உள்ள இ.ம.இ., அ.வி.தி. தலைவர்கள், செயலாளர்களை நியமித்து, அவர்கள் மூலமே மக்களின் உடல்பிணியையும், உயிர்ப்பிணியையும் நலமாக்கி வருகின்றார். இதன்மூலம் மட்டுமின்றி, தம்மைக் காணாத எண்ணற்ற அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் மூலம் பல்வேறு நலங்களையும் மக்களுக்கு விளைவித்து வருகின்றார். எனவேதான், தாங்கள் <u>குருதேவரின் அருளுலகச் சமத்துவ உணர்வை</u> முழுமையாக உணர்ந்து செயல்பட வேண்டும் என்று விரும்பியே

உடனடியாகத் தாங்கள் எழுதிய கடிதம் கண்டதும் நீண்ட மடல் வரைகின்றோம்.

8. தாங்கள் அ.வி.தி. செயல்வீரர்களின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுச் செயல்படும் தரமும், திரமும், தீரமும், உரமும் உடையவர் என்று குருதேவர் குறிக்கின்றார். நாம் அருளுலக வீரர்களாக மட்டும் தயாராகிப் பயனில்லை. அறிவு வளத்திலும் தயாராகியே தீர வேண்டும். பொருளுலகத்தில் மண்டிக் கிடக்கும் அறியாமைகளை, இல்லாமைகளை, இயலாமைகளை அருளுலகவாதிகளால்தான் முழுமையாக நீக்க முடியும். அருளாளர்கள்தான் தாய்மொழிப் பற்றோடும், தம்மினப் பற்றோடும், தாய்நாட்டுப் பற்றோடும் வாழ்ந்திருக்கின்றார்கள். அருளாளர்கள்தான் எல்லாத் துறைகளின் தலைமையையும் ஏற்க வேண்டும்; அருளாளர்கள்தான் அரசியல் தலைமைகளை ஏற்க வேண்டும் என்ற அறைகூவலையே நாம் விடுக்கின்றோம்.

9. இன்று நாம் போலி அரசியல்வாதிகளாலும், சமயவாதிகளாலும், சமுதாயவாதிகளாலும் தவறாக இட்டுச் செல்லப்படுகின்றோம். மனித நாகரீகத்தில், மனிதப் பண்பாட்டில் எதை எதையெல்லாம் தவறு, குற்றம் என்று சொல்கிறோமோ, அவையெல்லாம்தான் இன்றைய தினம் நாகரீகங்களாக, பண்பாடுகளாக; அவற்றை நிகழ்த்துகின்றவர்களை தலைவர்களாக, தலைமைச் சத்திகளாக ஏற்கின்ற அவல கேவல நிலை ஏற்பட்டுள்ளது. இதே கவலைநிலைதான் அருட்துறையிலும் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ்மொழியை வளர்க்கவும், சைவ சமயத்தை காத்து வளர்க்கவும் ஏற்படுத்தப்பட்ட பீடங்கள், மடங்கள், ஆதீனங்களின் (இம்மடங்கள் யாவும் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் அமைக்கப்பட்டவை) நிர்வாகிகள் சைவ சமயத்தையும், தமிழ்மொழியையும் வளர்ப்பதை விட்டுவிட்டு மடத்துக்குள்ளே முடங்கிக் கிடப்பவர்களாகவே ஆகிவிட்டனர்.

இன்றைய தினம் மக்களுக்கு அருட்துறையில் ஏற்பட்டிருக்கும் புரியாமைகளுக்கும், இயலாமைகளுக்கும் விளக்கம் சொல்லிட யாரும் முன்வரவில்லை. ஏற்கனவே எழுதி வைத்துள்ள கருத்துக்களை வாய்மூலமாக மக்களிடையே எடுத்துக் கூற எந்த மதத் தலைவரும் முன்வரவில்லை. ஒவ்வொரு மடாதிபதியும், பீடாதிபதியும் தங்களை நம்பி கைக்கொட்டும் கூட்டத்தை வளர்க்கும் குழுத் தலைவர்களாக வாழ விரும்புகின்றனரே அன்றி, சமுதாயத்தின் தலைமையை ஏற்கும் தன்னிகரற்ற தலைவர்களாகிட முன் வராததுதான் வேதனை.

ஆனால், நமது குருதேவர் ஒருவர்தான் "இதை யாமே கண்டு பிடித்தோம்" என்று கூறாமல்; **"எமது முன்னோர்களான பதினெண்சித்தர் பீடாதிபதிகள் கூறிய கருத்துக்கள் இவை"** என்று கூறுவதோடு; "குருபாரம்பரியத்தில் உள்ளபடியே செயல்படுத்துகின்றோம்" என்று சொல்லியே செயல்பட்டு வருகின்றார். **யாருக்காகவும், எதற்காகவும், எதையும் கூட்டியோ, குறைத்தோ கூறாமல், ஏட்டில் உள்ளபடியே மக்களுக்கு எடுத்துக் கூறிச் செயல்படுபவர்தான் குருதேவர்.**

இதுவரை எந்த அரசியல் தலைவரும், சமயத் தலைவரும், சமுதாயத் தலைவரும் தமது கொள்கையை அச்சிட்டு மக்களுக்கு வழங்கியதே இல்லை. குருதேவர் ஒருவர்தான் **தான் கூறுகின்ற ஒவ்வொன்றையும் அச்சிலே அடித்து புத்தகங்களாக மக்களுக்கு வழங்கி வருகின்றார்**. அதே நேரத்தில் **அருளை அநுபவப் பொருளாக அருட்கோட்டங்களின் மூலம் ஒவ்வொருவரின் இல்லத்திலும், உள்ளத்திலும் வழங்கி வருகின்றார் குருதேவர்**.

10. சமய சமுதாய அரசியல் மறுமலர்ச்சியை உங்களின் மூலமும் செயல்படுத்திட குருதேவர் விரும்புகின்றார். எனவே, முழுமையான அ.வி.தி. செயல்வீரராகச் செயல்பட அழைக்கின்றோம் உங்களை.

11. வாரம் தோறும் மதுரைத் தத்தனேரி சுடலையிலும், மூலக்கரைச் சுடலையிலும் நடைபெறும் யாகப் பூசைகளில் கலந்து கொண்டு;

வருகின்ற பிணியாளர்களுக்கு முழுமையான சன்னிதான உடையில் நின்று மந்திரியுங்கள். புதன்கிழமை தோறும் நடைபெறும் கடம்பவன யாகத்திலும், சனிக்கிழமை மதிச்சியம் பூசையிலும், வெள்ளிக்கிழமை மீனாட்சியம்மன் கோயிலுக்கும் சென்று வாருங்கள். அருளை அனுபவப் பூர்வமாக உணரும் வல்லமை ஒரு சிலருக்குத்தான் ஊழ்வினையாலும், விதியாலும், சூழ்வினையாலும் அமைகிறது. அப்படி ஊழ்வினையும், சூழ்வினையும், விதியும் அமையப் பெற்ற தாங்கள் பெறற்கரிய குருதேவர் கிடைத்துள்ள இப்பிறவியில் முழுமையடைய முயல வேண்டும்.

நமது இயக்கத்தில் உள்ளவர்களுக்கு விடாமுயற்சியும், முழுநம்பிக்கையும், குருவை நம்புதலும் உண்மையாக இருக்குமானால் எவர் எவராக வேண்டுமானாலும் மாறலாம், உயரலாம். முன்னவர், பின்னவர் என்ற பாகுபாடே இல்லை. குருதேவருக்குள் அனைத்துச் சீடர்களும் உள்ளனர். அனைத்து அடியான்களின் உள்ளத்தில் குருதேவர் இருக்கின்றாரா? என்பதுதான் சந்தேகம். எனவே, **'குருவே கரு, குருவே துணை, குருவே எல்லாம், குருவில்லா வித்தை பாழ், குருவே அனைத்துக்கும் சத்தி, சித்தி'** போன்ற குருபாரம்பரிய வாசகங்களை உணர்ந்து மிகச் சிறந்த சித்தரடியானாக மாறிச் செயல்படுங்கள்.

சன்னிதான உடை சிவப்பில் வாங்கி கட்டிக் கொண்டு பூசையில் அமரவும். (இடுப்பில் 4 முழம், கச்சை 6 முழம், தலைப்பாகை 10 முழம்). மெய்ஞ்ஞானக்கொடி, மயில்பீலி, முடிந்தால் திரிசூலம் இவைகளைத் தயார் செய்து கொண்டு நாள்தோறும் பகலிலும், இரவிலும் 11-1½ மணியில் பூசையில் அமருங்கள். குறைந்தது 1½ மணி நேரமாவது பூசையில் அமர வேண்டும். கலசம் ஒன்றைத் தயார் செய்து கொண்டு குத்து விளக்கும், ஒரு கண்ணாடி ஆகியவற்றை பூசையில் வைத்து முழுமையாக உங்களைத் தயார் செய்து

கொள்ளுங்கள். தன்னைத் தயாரித்துக் கொண்டுதான் பிறகு மக்களைச் சந்திக்க வேண்டும். முதலில் முழுமையான பூசையில் அமர்ந்து **'பதினெண்சித்தர் பூசாமொழி வாசகங்களை'**க் கூறித் தங்களை சித்தர் நெறிச் செல்வராகத் தயாராக்கிக் கொள்ளுங்கள்.

12. அருள்மிகு சுடலைச் சன்னிதானம் பெரி.முத்தையா அவர்களோடு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் ஒரு சில நாட்களாவது சுற்றுப்பயணம் சென்று நேரடி அநுபவங்கள் பெறுங்கள். நீங்கள் அருட்செல்வராக உருவாவது போல் பலரையும் அருட்செல்வர்களாக உருவாக்கித் தமிழையும், இந்துமதத்தையும் விழிச்சியும், எழுச்சியும் பெற வையுங்கள். தமிழின ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் பாடுபடும் தமிழினத் தளபதியாக மாறிடுங்கள்.

இம்மடலோடு அனுப்பி உள்ள புத்தகங்களையும், இயக்க வெளியீடுகளையும் படித்து வாருங்கள். பிறருக்கும் நமது இயக்கக் கருத்துக்களை எடுத்துக் கூறுங்கள். பிறரிடம் நமது இயக்கத்தை அறிமுகப்படுத்துங்கள். தாங்கள் அருளுலக அநுபவங்களை அநுபவப் பூர்வமாகப் பெற்றவர். ஆதலால், நமது இயக்கத்தில் அடியான்களை வழிநடத்திச் செல்லும் பொறுப்பினை வழங்குகிறோம்.

1992இல் அமையவிருக்கும் அருளாட்சி அமைப்புப் பணிக்கான அருட்போரில் குருதேவர் முழுமையாக நேரடியாக ஈடுபட்டுள்ளார். எனவே, ஓய்வின்றி பூசையிலும், தவத்திலும் குருதேவர் தமது பெரும்பொழுதைச் செலவிட்டு வருகின்றார். எனவேதான் குருதேவர் விரும்பியும் தங்களுக்குக் கடிதம் எழுத இயலவில்லை. மதுரையிலிருந்து நேரில் தலைமைப்பீடத்துக்கு வருபவர்களிடம் ரூ.200/-க்குரிய புத்தகங்களை தந்தனுப்பலாம் என்றிருந்தோம். ஆனால், தங்களின் அளப்பரிய ஆர்வத்தினையும், அருட்திறத்தையும் கண்டு குருதேவர் உடனே ரூ.10/- தபால் செலவு செய்து அனுப்பிட ஆணையிட்டார். உடன் அனுப்பியுள்ளோம். பெற்றுக் கொள்க.

மற்றவை பின்பு: அனைத்து விளக்கங்களையும், குருதேவரிடம் நேரடித் தொடர்பு மூலமோ, பிறம்மயோகி, துரைராசன், பெரியவர் ... ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

ஓம் திருச்சிற்றம்பலம்!

**அன்பு**
**சி.கவிக்குமார்.**

**குறிப்பு:-**

1. தாங்கள் இதுவரை தயாராகிச் செயல்பட்ட முறையெல்லாம் காட்டிலே தானாக முளைத்துப் பயன் தரும் கனிமரங்கள் போன்றதாகும். ஆனால், இனிமேல் செயல்படப் போவது எல்லாம் பதினெண்சித்தர் பீடாதிபதியும், மடாதிபதியுமான குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் முயற்சித்து உருவாக்கப் போகும் மலர்ச்சோலையாக, பழத்தோட்டமாக மாறப் போகின்றீர்கள். எனவே, இவற்றிற்கு வேலி உண்டு, காவல் உண்டு. அவ்வப்போது உரமிடப்படும், தண்ணீர் பாய்ச்சப்படும். எனவே, தாங்கள் முறைப்படி ஒரு தலைவரின் கீழ் செயல்படப் போகும் மாபெரும் தளபதியாகப் போகின்றீர்கள். இதற்கெனப் பயிற்சிகள் உண்டு. இம்மண்ணுலகுக்கு முந்திய காலம் தொட்டு ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வளர்க்கப்பட்டு வரும் அருளுலக அறிவியல்களையும், கலைகளையும் (The Divine Arts and Sciences) கற்றுக்கொள்ளப் போகின்றவர்களாக ஆகிடுகின்றீர்கள்.

எனவே, அருளுலகில் குருடன் கையில் புதையல் கிடைப்பது போலவும், ஏட்டறிவோ பட்டறிவோ தேவையான அளவு கூட

இல்லாத பாமரனுக்கு லாட்டரிச் சீட்டில் பல இலட்சம் கிடைப்பது போல் செயல்படுகின்ற அருளாளர்கள் போலில்லாமல் எதையும் வரலாற்றுப் பின்னணியில், இலக்கியச் சான்றுகளோடும், ஊன்றுகளோடும் விளக்கிடக் கூடிய வல்லமையைப் பெற்ற ஒரு மாபெரும் அருளாளராக ஆகப் போகின்றீர்கள். **இப் பேருண்மையினை இனிமேல் உங்களுடைய ஒவ்வொரு நொடிப் பேச்சும், மூச்சும், சொல்லும் விளக்கிடும் வண்ணமாக வாழ வேண்டும். அதுவே குருவுக்கு செலுத்தும் காணிக்கையாகும்**.

2. குறிப்பாக பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதத்**திற்கும், பிறமண்ணினரான பிருமணர்களின் *பொய்யான ஹிந்துமதத்*துக்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துக்காட்டுங்கள். பிறமண்ணினரான பிருமணர்களின் வேதமதக் கருத்துக்களாலும், கற்பனைகளாலும், சடங்குகளாலும், சமசுக்கிருத மொழியாலும் **பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியெனும் சீவநெறியான சைவ சமயமான மெய்யான இந்துமதத்**துக்கு ஏற்பட்டுள்ள கறைகளையும், குறைகளையும், சிதைவுகளையும், சீரழிவுகளையும், கலக்கங்களையும், குழப்பங்களையும், இருட்டடிப்புக்களையும், திசைதிருப்பல்களையும், நலிவுமெலிவுகளையும், தேக்க வீக்கங்களையும், அடக்க முடக்க ஒடுக்கங்களையும் பிறர் மனம் புண்படாமல் மிகத் தெளிவாக விளக்கி உரைத்தேயாக வேண்டும். அதுவும் அநுபவப் பூர்வமாக விளக்கியேயாக வேண்டும்.

3. பேரன்புக்கும், பேரார்வத்துக்கும், பேராற்றலுக்கும் உரிய பெரியீர்! தாங்கள், இத்துடன் அனுப்பியுள்ள அச்சிட்டவைகளை பலமுறை திருப்பித் திருப்பி ஊன்றிப் படியுங்கள். விரைவில் எங்களிடம் உங்களுக்கு வழங்குவதற்கு மிஞ்சியிருக்கும் கையெழுத்துப் பிறதிகளை அனுப்புகிறோம். எண்ணற்ற கையெழுத்துப் பிறதிகளுக்கு நகல்கள் இல்லை. தாங்கள் நேரில் வந்தால் தாங்களே நகலெடுத்துச்

செல்லலாம். மற்றவற்றை குருதேவரிடமும், நமது இயக்க வீரர்களிடமும் கலந்துரையாடல் மூலம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

4. ஐயா, இன்றைக்கு நாட்டில் பெருஞ்செல்வமும், பெரும்புகழும் உடைய இந்துமத மடங்களும், பீடங்களும், குருமார்களும், ஆச்சாரியார்களும், சித்துவிளையாடல் மிக்க அருளாளர்களும், புராண இதிகாசச் சொற்பொழிவாளர்களும் இருக்கிறார்கள். ஏறத்தாழ இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இந்துமதத் தந்தையாக, இந்துமத ஆச்சாறியாராக, குவலய குருபீடமாக, குருதேவராக, ஞானபீடமாக, ஞானாச்சாரியாராக, நமது பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் வாழ்வது தெரியும். அதுவும் நமது குருதேவரிடம்தான் நமது இந்துமதத்தின் மெய்யான உயிர்நாடியான அருளுலகக் கலைகள், அறிவியல்கள், ... இருக்கின்றன என்பது ஏறத்தாழ எல்லோருக்கும் தெரியும்! தெரியும்! தெரியும்!

ஆனால் ஒருவர் கூட மேற்படிச் செய்திகளையும், கருத்துக்களையும் (The Information and News) அச்சிட்டு வெளிக்கொணர வேண்டும் என்று குருதேவரை நாடவில்லை. குருதேவருக்கு உதவ முன் வரவில்லை. ஒவ்வொருவரும் சாதாரண அற்ப மானுடர் போலவே போட்டி பொறாமைகளாலும், ஆணவ அகம்பாவங்களாலும், வம்பு வீம்புகளாலும், புகழ் வெறிகளாலும், அதிகார வெறிகளாலும், **வெறிபிடித்து அலைகின்றவர்களாகவே** இருக்கின்றார்கள்.

எனவேதான் நமது குருதேவர் இலைமறை காயாகவே வாழ்கின்றார். மேலும், நமது குருதேவர் தாம் உருவாக்கும் சித்தரடியான், சித்தரடியாள், சித்தரடியார்கள் மூலம் மக்களைச் சந்திக்கவும், சிந்திக்க வைக்கவும் விரும்பியே செயல்பட்டு வருகின்றார்.

எனவே, அருளுலக இரகசியங்களைக் காப்பவராகவும், குருதேவரின் நம்பிக்கையை என்றும் மாறுதவராகவும், மீறுதவராகவும் செயல்பட்டு வாருங்கள். பலரையும் மாற்றுங்கள். இம்மடலை அனைவருக்கும் படித்துக் காட்டுங்கள்.

**(குருதேவர் கூற எழுதியது).**

**அன்பு**
**சி.கவிக்குமார்.**

நகல் எடுத்தவர்:

சித்தர் மகள் தனபாக்கியம், க/பெ சித்தரடியார் பழ.கோபால்.

தட்டச்சு நகல்தயாரிப்பு:-

மூவர்குழு சித்தர்நெறியாளர்கள்:-

1. சித்தரடியான் இ.வைத்தியலிங்கம், 16, அருணகிரிநாதர் தெரு, பாளையங்கோட்டை.
2. சித்தரடியார் இ.பூவலிங்கம், 79, சிவன் தெற்கு இரத வீதி, பாளையங்கோட்டை.
3. சித்தரடியான் ந.பரமசிவம், 17, அருணகிரிநாதர் தெரு, பாளையங்கோட்டை.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: தட்டச்சு நகலாகக் கிடைத்தது.//**

# குருவாசகம்

'மாண்டு போன மனிதர்களே கடவுள்கள், தெய்வங்கள், ஆண்டவர்கள், தேவர்கள், தேவதைகள், இருடிகள், கந்தர்வர்கள், கிண்ணரர்கள், அமரர்கள் .... என்று பலவகை நிலைகளில் சிறப்பிக்கப்பட்டு வணங்கப் படுகிறார்கள். இச்சிறப்புக்கள் இம்மாண்டவர்கள் தங்களின் வாழ்நாளில் செய்த நன்மைகள் தீமைகள்; சாதித்த அரிய சாதனைகள்; பெற்றிட்ட வெற்றி தோல்விகள், ... முதலியவைகளுக்கேற்ப அமைபவைகளே. எனவே, இவர்களுக்குரிய பூசைகளிலோ, வழிபாடுகளிலோ, கும்பிடுகளிலோ, வேண்டுதல்களிலோ, ... படைக்கப்படும் பலி பொருள்கள் மாண்டவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அமைக்கப்பட்டவையேயாகும் என்பதை உணர்ந்து பலிபொருள்களில் எவ்வித மாற்றத்தையும் செய்ய முயலாமல் முன்னோர் முறைப்படியே என்றென்றும் பலி பொருள்கள் படைக்கப்பட்டிடல் வேண்டும்' என்று பதினெண்சித்தர்கள் கூறுகிறார்கள்.

சித்தர் நெறிப்படி ஒவ்வொரு வழிபாட்டு நிலையத்திலும் அந்தக் கருவறை மூலவரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே படைக்கப்படும் பலிபொருள்கள் அமைந்திருந்தன. ஆனால், ஆரியர்கள் புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்டது போல் புத்தர்களையும், சமணர்களையும் பார்த்து ஒரே மாதிரியான பலிபொருள்களை படைக்கலானார்கள். அவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட வழிபாட்டு நிலையங்களில் எல்லாம் புலால் இல்லாத பலிபொருள்களே படைக்கப் படலாயின. இதனால் பெரும்பாலான வழிபாட்டு நிலையங்கள் ஆற்றலையும், பொலிவையும், செழிப்பையும் இழந்தன. இதனை ஆரிய அடிமைகளாகிட்ட மன்னர்கள் உணர மறுத்தனர். இராசராசனே வழிபாட்டு நிலையங்கள் நலிய, இழிய, அழியக் காரணமாகிட்டான்.

**//பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களால் எழுதப்பட்ட குருவாசகம் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.//**

# இருக்கு வேதம் 1 முதல் 10 வரை உள்ள 48 நாள்உரைக்கோவை வாசக மலர்களிலும் உள்ள கருத்து:

நாள், கோள், மீன், இராசி, உலகம், உலகில் உள்ள வெற்றிடம், காற்று, நெருப்பு, நீர், நிலம், கல், மண், மணல்;

புல், பூண்டு முதலிய பயிரினங்கள்;

புழு, பூச்சி முதல் மனிதன் வரை உள்ள பல்வேறு வகையான உயிரினங்கள்;

இவற்றின் தோற்றம் அல்லது பிறப்பு, வளர்ச்சி, இறப்பு, மறுபிறப்பு;

உயிரணுக்களால் உருவாகின்ற ஆவி, ஆன்மா, ஆருயிர், இம்மூன்றும் இணைந்த சீவன் (இலிங்க வடிவில் இருப்பது; இதில் இலிங்கத்தின் அடிப்பாகம் ஆவி, ஆவுடையார் பகுதி ஆன்மா, மேலே இருக்கும் பாணம் ஆருயிர்);

இந்தச் சீவனின் வாழ்நாள், இந்தச் சீவன் அப்படியே அழியாமல் இருப்பது, இந்தச் சீவன் அழிவைப் பெறுவது, ... முதலிய செய்திகள் பரவலாக பல கோணங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன.

**//குருதேவர் இந்துவேத நாயகமாக இருந்து அருளிய இந்துவேதத்திலிருந்து எடுக்கப்பட்ட கருத்து.//**

**“இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**

**- குருபாரம்பரிய வாசகம்.**





மெய்ஞ்ஞானக்கொடி



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

பொருளுலகத்தில் மண்டிக் கிடக்கும் அறியாமைகளை, இல்லாமைகளை, இயலாமைகளை அருளுலகவாதிகளால்தான் முழுமையாக நீக்க முடியும். அருளாளர்கள்தான் தாய்மொழிப் பற்றோடும், தாய்நாட்டுப் பற்றோடும் வாழ்ந்திருக்கின்றார்கள்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org

https://gurudevar.in https://gurudevar.org

https://induism.org Email: indhuism@gmail.com